பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 23 வியாழக்கிழமை 08.09.2022 கதிர் 3045

**இது ரகசியம் அல்ல!**

வடக்கு மாகாண சபையின் மக்கள் பிரதிநிதித்துவம் காலாவதியானதுதான் பலருக்கும் வசதியாகப் போய்விட்டது. அந்த மாகாண சபை நிர்வாகம் படும் பாடு பெரும்பாடு.

மாகாண சபையின் வாகனங்களை வைத்து ☞ 2

# வெலிக்கடை, மகஸினில் உணவு தவிர்ப்புப் போர்!

## தமிழ் இளைஞர்கள் குதித்தனர்



கொழும்பு,செப்ரெம்பர் 08

வெலிக்கடை மற்றும் மகஸின் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றனர் என்று அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா. சத்திவேல் தெரிவித்துள்ளார். ☞ 6

## அரசியற் கட்சியின் யாழ். பிரமுகர் லஞ்சம் பெற்றபோது சிக்கினார்!

அரச வேலை பெற்றுத் தருவதாகக் கூறி, பெண்ணொருவரிடம் பாலியல் லஞ்சம் மற்றும் 50 ஆயிரம் ரூபாய் பணம் கோரிய இருவரை எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, கொழும்பு பிரதான நீதிவான் ஹர்ஷண கெகுணவெல,உத்தரவிட்டார். ☞ 6

## இராஜாங்க அமைச்சர்கள் இன்று காலை பதவியேற்பு

புதிய இராஜாங்க அமைச்சர்கள் குழுவொன்று இன்று காலை பதவிப்பிரமாணம் செய்யவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முப்பதுக்கும் மேற்பட்ட புதிய இராஜாங்க அமைச்சர்கள் பதவியேற்க உள்ளனர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பிரிட்டிஷ் அமைச்சரவையில் இலங்கை வம்சாவளி ரணில்!



பிரித்தானிய அரசாங்கத்தில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக நியமிக்கப்பட்ட முதல் இலங்கைவம்சாவளியைச் சேர்ந்தவர் என்ற வரலாற்றுப் பெருமையை ரணில் ஜெயவர்த்தனா படைத்துள்ளார்.

புதிய பிரித்தானிய பிரதமர் லிஸ் ட்ரஸ்ஸின் முதலாவது அமைச்சரவையில் சுற்றாடல், ☞ 2

## மாணவர்களின் புத்தகப்பை இனிமேல் சோதிக்கப்படும்!

போதைப் பொருள் பாவனையில் இருந்து இருந்து பாடசாலை மாணவர்களைக் காப்பாற்றும் நடவடிக்கையாக மாணவர்களின் புத்தகப்பை பரிசோதிக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாட்டுக்குள் ஹெரோயினைக் கொண்டுவந்து அதனை மிக நுணுக்கமாகப் பாடசாலை மாணவர்கள் மத்தியில் கொண்டு செல்லும் வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். ☞ 2

## 37 கிலோ கஞ்சாவுடன் கிளாலியில் 2 பேர் கைது

கிளாலிப் பகுதியில் கடற்படையினரால் 37.கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவரும் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது மீட்கப்பட்ட கஞ்சாவுடன் சந்தேகநபர்களும் பளை பொலிஸாரிடம் ☞ 2



## மணப்பெண்ணை ஏற்றிச் சென்ற கார் வீதியை விட்டு விலகி வடிகாலுக்குள்!

யாழ்ப்பாணம் பண்டத்தரிப்புப் பகுதியில் நேற்றுக் காலை திருமண மண்டபத்திற்கு மணப்பெண்ணை அழைத்துச் சென்ற கார் ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

வீதியை விட்டு விலகி வடிகாலுக்குள் இறங்கிய நிலையில் நின்றிருந்த காரில் இருந்தவர்கள் பின்னர் பத்திரமாக மீட்கப்பட்டனர். சாரதி உட்பட அவர்களில் எவருக்கும் எவ்வித ஆபத்தும் ☞ 6

## ரயில் மோதி யாசகர் பலி!

புத்தளம் - முந்தல் பிரதேசத்தில் ரயில் மோதி யாசகர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புத்தளத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணம் செய்த பயணிகள் ரயிலில் மோதியே யாசகர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

முந்தல் பகுதிக்கும் - மங்கள எளிய பகுதிக்கும் இடைப்பட்ட பிரதேசத்திலேயே யாசகர், ரயில் பாதைக்கு அருகே நின்றுகொண்டிருந்தபோது இந்த அனர்த்தம் ஏற்பட்டது.
யாசகரின் சடலம், ரயில் ஊழியர்களால் முந்தல் ரயில் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது.

உயிரிழந்த யாசகர் யார் ☞ 2

## தேசிய சபை அமைக்க இணக்கம்

நாடாளுமன்றத்தில் அனைத்துக் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் 37 உறுப்பினர்களைக் கொண்ட தேசிய சபைக்கு, கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் ஒப்புதல் பெறப்படுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகளை தணிக்கும் வகையில், தேசிய சபை அமைப்பது தொடர்பில் தீர்மானிக்கும் கட்சித் தலைவர்கள் கூட்டம் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் நாடாளுமன்றத்தின் அனைத்து அரசியல் கட்சி தலைவர்களின் பங்கேற்புடன் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்றது.

அந்த உடன்படிக்கையின்படி, சபாநாயகர் தேசிய சபையின் தலைவராகவும், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், சபைத் தலைவர் மற்றும் ஆளும் ☞ 2

## வடக்கு, கிழக்கு தமிழர்கள் மீது கடற்படையினர் வெறியாட்டம்!

### கூட்டமைப்பு கடும் விசனம்



வடக்கு, கிழக்கில் கடற்படையினருக்கு 'வெறி' வந்தால், அவர்கள் 'மது போதை'யில் நின்றால் அவர்களின் 'பைட்ஸ்' (கடிக்கும் தீனி) ஆக தமிழர்கள் பயன்படுத்தப்படுகின்றார்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்

இது தொடர்பில் அவர் மேலும் ☞ 2

## இலங்கைக்கு எதிராக முதல் தடவை பொருளாதார மோசடிக் குற்றச்சாட்டு

### ஐ.நா. முன்வைத்துள்ளது என்கின்றது சஜித் அணி

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை இலங்கைக்கு எதிராக முதல் தடவையாகப் பொருளாதார மோசடிக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், எதிர்வரும் திங்கட்கிழமை ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடர் ☞ 2



காலைக்கதிர் Kalaikkathir

# அரசு அதிகாரிகளுக்கு ஊதியமின்றி விடுமுறை

அரசு அதிகாரிகளுக்கு ஊதியமின்றி விடுமுறை வழங்குவதற்கான சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் மாயாதுன்னவின் கையொப்பத்துடன் இந்த சுற்றறிக்கை வெளி வந்துள்ளது.

ஓய்வூதியத்திற்கு எந்தவித பாதிப்பும் இல்லாமல் ஓய்வூதியம் பெறும் அரசு ஊழியர்கள் அதிகபட்சமாக 05 ஆண்டுகள் வரை இந்தச் சிறப்பு விடுமுறைக்கு விண்ணப்பிக்கலாம்.

ஜூன் 13 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதுதொடர்பான முடிவு எடுக்கப்பட்டு, செப்டம்பர் 6 ஆம் திகதி அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

# நடிகை தமிதா கைது



*இலங்கையின் பிரபல நடிகை தமிதாஅபேரத்னபொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*தியத்த உயனவுக்கு அருகில் நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்பின்னர் விசேட பொலிஸ் குழுவினால் அவர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.*

*கடந்த ஜூலை மாதம் ஜனாதிபதி அலுவலகத்திற்குள் வலுக்கட்டாயமாக நுழைந்தமைக்காக அவர் கைது செய்யப்பட்டார்.*

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு பெரிய ஓட்டம் ஓடுகிறார்கள் பொறுப்பான நிர்வாகிகள்.

மாகாணக் காணிகளை 'வழித் தேங்காயைத் தெருப் பிள்ளையாருக்கு உடைப்பது போல' செல்வாக்குள்ளோருக்கு தாரை வார்ப்பது குறித்து நமது பத்திரிகையில் தகவல் வெளியாகியிருந்தது. அது போல வாகனத் தாரை வார்ப்புப் பற்றிய தகவல் இது.

புதிய மாகாண சபை மக்கள் பிரதிநிதிகள் பதவியேற்ற சமயம் முதலமைச்சருக்கும், மாகாண அமைச்சர்களுக்கும், அவைத் தலைவருக்கும் என ஆறு புதிய வாகனங்கள் தருவிக்கப்பட்டன.

அதில் இரண்டை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பயன்பாட்டுக்கு என்ற பெயரில் வடக்கு மாகாணத்தில் இருந்து மத்திய அரசு தற்காலிகமாக பெற்றுக் கொண்டது. அவை இப்போது எங்கு என்பது யாருக்கும் தெரியாது. ஒன்று மட்டும் இன்னமும் மைத்திரியின் வாகன அணியில் இருப்பதாக ஒரு தகவல் உண்டு.

அதற்கிடையில் வடக்கு மாகாண சபையின் முதல்வரின் பயன்பாட்டிற்காக 2014ஆம் ஆண்டு புதிதாக தருவிக்கப்பட்ட பறக்கும் படை வாகனத்தை முதலமைச்சரின் பதவிக்காலம் முடிந்த பின்னர், யாழ் மாநகர மேயரின் பாவனைக்கு புதிய வாகனம் இல்லாததனால் அப்போதைய மாகாண ஆளுநர் தற்காலிகமாக வழங்கியிருந்தார்.

ஆனால் அரசு தரப்பில் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மேல் மட்டத்தில் செய்த முறைப்பாட்டை அடுத்து அப்போது மேயராக இருந்த ஆனோல்ட் அந்த வாகனத்தை மீள மாகாண சபைக்குக் கையளித்தார்.

இப்போது அந்த முதலமைச்சரின் வாகனத்தை பொலிஸாருக்குத் தாரை வார்த்துத் தன் வேலையை - கைவரிசையை - நிறைவேற்ற இப்போதைய ஆளுநர் நடவடிக்கை எடுத்திருக்கிறார் என நம்பகரமாக அறிய வருகிறது.

அந்த வாகனத்தை பொலிஸாருக்கு வழங்குமாறு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா மாகாண பிரதம செயலாளருக்கு எழுத்தில் உத்தரவு ஒன்றை வழங்கியுள்ளார். அந்த உத்தரவுக் கடிதத்திற்குப் பதிலளித்த மாகாண பிரதம செயலாளர், மாகாணத்தினால் மத்தியின் கீழ் உள்ள இன்னுமொரு திணைக்களத்திற்கு இப்படி வாகனங்களை நேரடியாக வழங்க முடியாத நிலையை நிர்வாகச் சட்ட விதி நெருக்கடிகளைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன் அடிப்படையில் நேரடியாகப் பொலிஸ் திணைக்களத்திற்கு வழங்க முடியாத வாகனத்தை தற்போது திறைசேரியின் வளங்கள் பகுதிக்கு திருப்புமாறு ஆளுநரால் உத்தரவிடப்பட்டுள்ளது எனத் தெரிகின்றது. அதன் பினபு திறைசேரியில் இருந்து இந்த வாகனம் வடக்கு மாகாணப் பொலிஸ் திணைக்களத்திற்குக் கையளிக்க ஏற்பாடாகியுள்ளது.

பதவியை விட்டுப் போக முன்னர் பெரும்பான்மைத் தரப்புக்கு தாராளமாகத் தானம் செய்து தியாக சாதனை படைத்துவிடுவார் நம் ராஜா போலும்.

**- மின்னல் -**

## மாணவர்களின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும், பெற்றோர்கள் மற்றும் பாடசாலை சமூகம் இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வின்போது எதிர்க்கட்சி உறுப்பினர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இதனைத் தெரிவித்தார்.

## ரயில் மோதி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பது தொடர்பில் அடையாளம் காணப்பட வில்லை என்று முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

## பிரிட்டிஷ் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உணவு மற்றும் கிராமிய விவகாரங்களுக்கான இராஜாங்கச் செயலாளராக (அமைச்சராக) ரணில் ஜெயவர்த்தனா நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜார்ஜ் யூஸ்டிஸுக்குப் பதிலாக ஜெயவர்த்தனா, 2015 இல் வடகிழக்கு ஹாம்ப்யர் நாடாளுமன்ற உறுப்பினராக நாடாளுமன்றத்தில் நுழைந்தவர் இவர்.

அவர் முன்னர் சர்வதேச வர்த்தக அமைச்சராக பணியாற்றினார். மே 2020 முதல் செப்டம்பர் 2022 வரை, வெளியுறவு செயலாளரான லிஸ் ட்ரஸ்க்காக அவர் பணிபுரிந்தார்.

ரணில் ஜெயவர்த்தனா நாடாளுமன்றத்துக்குள் நுழைவதற்கு முன்னர், லொயிட்ஸ் வங்கியில் பணிபுரிந்ததோடு, ஹம்ப்யரில் கவுன்சிலராகவும் இருந்தார்.

## 37 கிலோ கஞ்சாவுடன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்களைக் கஞ்சா பொதிகளுடன் நீதிமன்றத்தில் முன்னிலைபடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

## தேசிய சபை அமைக்க .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் தலைமை அமைப்பாளர் ஆகியோர் அதிகாரபூர்வமாக அதன் உறுப்பினர்களாகவும் இருப்பர்.

தேசிய சபையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 37 ஆகும், இதில் நாடாளுமன்றத்தில் செயல்படும் அனைத்துக் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக இருப்பர்.

இது தொடர்பான பிரேரணையை உடனடியாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க கட்சி தலைவர்கள் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது

## வடக்கு, கிழக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறுகையில்,

வடக்கு மாகாணத்தின் இன்றைய நிலைமை மிக மோசம். கிழக்கு மாகாணத்தின் நிலைமையும் மோசம்.

கிளிநொச்சியிலுள்ள வலைப்பாடு என்ற கிராமத்தில் கடல் தொழில்தான் பிரதான மான தொழில். அந்தத் தொழிலுக்குச் சென்ற இராசரத்தினம் நிமால் என்ற 44 வயதுடைய 3 பிள்ளைகளின் தந்தை கடந்த 4 ஆம் திகதி வலைப்பாட்டைச் சேர்ந்த கடற்படையினரால் மிக மோசமாகத் தாக்கப்பட்டு சுயநினைவற்ற நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டு சத்திரசிகிச்சைக்குட்படுத்தப்பட்டார்.

கடற்படை இவரைத் தாக்கியதற்கான காரணம் என்ன? ஆயுதம் வைத்திருந்தாரா? குண்டுகள் வைத்திருந்தாரா? நாட்டுக்கு எதிராகச் செயற்பட்டாரா?

கடற்படையினருக்கு 'வெறி' வந்தால், அவர்கள் 'மதுபோதை'யில் நின்றால் அவர்களின் 'பைட்ஸ்' ஆக தமிழர்கள் பயன்படுத்தப்படுகின்றார்கள். தமிழர்கள் கொல்லப்படுகின்றார்கள். மிக மோசமாகத் தாக்கப்படுகின்றார்கள். இது மிக மோசமான நிலைமை. இதனை அரசு புரிந்து கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

## இலங்கைக்கு எதிராக .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பமாகின்றது. இதில் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் ஆணையாளரினால் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை தற்போது வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. அதில் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அதேபோன்று கடந்த 12 மாதங்களில் அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அரசுக்கு முடியாமல் போயிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

புதிய அறிக்கையில் பொருளாதார மோசடிக் குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை இலங்கைக்கு எதிராக முதல் தடவையாக பொருளாதார மோசடி குற்றச்சாட்டை வைத்திருக்கின்றது. இதற்கு முன்னர் ஒருபோதும் இவ்வாறான குற்றச்சாட்டை இலங்கைக்கு எதிராகத் தெரிவித்ததில்லை.

அரசு நிதி மோசடி செய்துள்ளதை சர்வதேச நாடுகள் சந்தேகிப்பதே இதற்குக் காரணமாகும் - என்றார்.







## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### 36வது பொதுப்பட்டமளிப்பு விழா - 2022

யாழ்.பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய மாண வர்களுக்கு பட்டச் சான்றிதழ்களை வழங்கும் முகமாக பொதுப்பட்டமளிப்பு விழா வினை 2022ம் ஆண்டு அக்டோபர் மாதம் 08ம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வியாபார முகாமைத்துவமாணி, வணிகமாணி ஆகிய பட்டக் கற்கைநெறிகளில் 28.03.2021 இற்கு பின்பும் 01.08.2022 திகதிக்கு முன்பும் சித்தியடைந்த மாண வர்களுக்கே மேற்படி பட்டமளிப்பு விழாவில் பட்டங்கள் வழங்கப்படவிருப்பதால், தகுதி உடைய மாணவர்கள் 19.09.2022 (திங்கட்கிழமை) இற்கு முன்னதாக அவர வருக்கான கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டினையும் பூர்த்தி செய்யப்பட்ட வேண்டுகோள் படிவத்தினையும் (Supplication Form) கீழே கொடுக்கப்பட்டுள்ள இணையத்தள முகவரியினூடாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர் கள்.

(கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதி பட்டமேலங்கியினை பெற்றுக்கொள்ளும் போது திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் கட்டாயம் சமர்ப்பித்தல் வேண்டும்)

வேண்டுகோள் படிவங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டிய இணைய இணைப்பு:
https://bit.ly/3KJ4Eyu

**கட்டணம் மற்றும் வங்கிக்கணக்கிலக்க விபரம்**

பட்டமளிப்பு விழா மொத்தக்கட்;டணம் ரூபா.4000.00 ஆகும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மக்கள் வங்கி கணக்கிலக்கத்திற்குச் சேரக் கூடியதாக ஏதா வது ஒரு மக்கள் வங்கிக் கிளையில் கட்டணத்தைச் செலுத்தவேண்டும். வங்கிப் பற் றுச் சீட்டில் பெயரையும் மாணவர் பதிவு இலக்கத்தையும் தெளிவாகக் குறிப்பிடவும்.

மக்கள் வங்கிக்கணக்கிலக்கம் : 890002460001794

மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் 021 – 222 – 3612 என்ற தொலை பேசி எண்ணூடாக அல்லது அனடஉசனஸரஜஷ்எ.தகஜ.யஉ.டம தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**
**06.09.2022**

## இலங்கைக்கான பயணத் தடைகள் கட்டுப்பாட்டை தளர்த்திய கனடா!

இலங்கையில் கடந்த மாதங்களாக நிலவிய அசாதாரண நிலை காரண மாக பல நாடுகள் தங்களது மக்களுக்கு இலங்கைக்கு விஜயம் செய்ய வேண் டாம் என அறிவுறுத்தியிருந்தன.

இந்த நிலையில், நாடு தற்போது மீண்டும் வழமை நிலைமைக்குத் திரும்புவதால் பல நாடுகள் இலங்கைக் கான தங்களது பயண ஆலோசனை யைத் தளர்த்தி வருகின்றன.

அத்துடன், அண்மைக்காலமாக இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணி களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

இதேவேளை, இலங்கை வழமை நிலைமைக்கு திரும்பி வருவதாக ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க அண்மை யில் அறிவித்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

இலங்கைக்கான பயண ஆலோச னையை புதுப்பித்து இலங்கையை செம்மஞ்சள் பட்டியலில் இருந்து மஞ் சள் நிற பட்டியலுக்கு குறைத்துள்ளது.

முன்னதாக இலங்கைக்கு அத்தி யாவசியமற்ற பயணங்களைத் தவிர்க் குமாறு கனடா தமது நாட்டு பிரஜைக ளுக்கு அறிவுறுத்தியிருந்தது.

அதனை தற்போது தளர்த்தி அதிக அவதானத்துடன் செயற்படுமாறு தமது நாட்டு பிரஜைகளுக்கு கனடா தெரிவித் துள்ளது.

இலங்கையில் எரிபொருள், உணவு, மருந்துகள் உள்ளிட்ட அத்தி யாவசியப் பொருள்களுக்குத் தொடர்ந் தும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் இதன் காரணமாக இலங்கை மஞ்சள் பட்டி யலில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படு கிறது.

கடந்த ஓகஸ்ட் மாதத்துக்குப் பின் னர் பிரான்ஸ், சுவிட்ஸர்லாந்து, பிரித் தானியா மற்றும் நோர்வே உட்பட பல ஐரோப்பிய நாடுகள் இலங்கைக்கான பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்தி யுள்ளன.

## கோட்டாபயவிற்கு அரசியல் தெரியாது!

### வெல்கம பகிரங்க அறிவிப்பு



கோட்டாபயராஜபக்சவுக்கு அரசியல் தெரியாது. அதனால் தான் பதுங்குகுழி ஊடாக ஓட வேண்டியேற்பட்டது என நவ லங்கா சுதந்திரக் கட்சியின் தலை வர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக் கும் போதே அவர் இவ்வாறு கூறியுள் ளார்.

மேலும் தெரிவிக்கையில் –

மஹிந்த ராஜபக்ஷ நல்லவர். ஆனால், நாட்டை விடவும் அவருக்குக் குடும்பம் தான் முக்கியம். உரிய காலத் தில் அவர் ஓய்வு பெற்றிருந்தால் தற் போதைய நிலைமை ஏற்பட்டிருக்காது.

கோட்டாபய தற்போது அவர் நாட் டுக்கு வந்துள்ளார். நல்லது, ஆனால் தயவு செய்து அரசியல் களத்துக்கு வந்துவிட வேண்டாம். பிரதமர் பதவி வழங்கலாம் என சிலர் ஏமாற்றலாம். அதனை நம்பிவிடக்கூடாது.

நாமும் நாடாளுமன்றத்தில் தான் உள்ளோம். சும்மா இருக்கமாட்டோம். மொட்டுக் கட்சியினர் ஜனாதிபதி ரணி லின் காலை வாருவார்கள்.

முன்னோக்கிப் பயணிக்க இடமளிக் கமாட்டார்கள். எனவே, ஜனாதிபதி, விரைவில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தவேண்டும். – எனக்கூறியுள்ளார்.

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி ஆகிய பயிர்ச்செய்கையும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சநேயர் கோவில்

SPECIAL DISCOUNT 150,000/-
தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலைத் தொழிற்சாலை
கோப்பித் தொழிற்சாலை
சுற்றுலா ஏற்பாடுகள்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ரணிலின் அழைப்பு நியாயமா?

**"இளைஞர்கள் மாற்றத்தைக் கோரி முதலாவது போராட்டத்தை ஆரம்பித்தனர். அந்தப் போராட்டம் முடிவடைந்த விட்ட நிலையில் இரண்டாவது போராட்டத்தை இங்கிருந்து ஆரம்பிப்போம்." –**

**இவ்வாறு அழைப்பு விடுத்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.**

**கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டு அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அங்கு வைத்து இந்த இரண்டாவது போராட்டத்திற்கு அழைப்பு விடுத்திருக்கின்றார்.**

**தமது கருத்தியலுக்கு வசதியாக இந்தப் போராட்ட நோக்கங்களை ஒரு பக்கமாகத் திருப்பி – வளைத்து – தமக்கு லாபகரமாக அதைப் பயன்படுத்த முயற்சிக்கிறார் அவர் என்பதுதான் உண்மை. இந்தப் போராட்டங்கள் தொடர்பில் சிலவற்றை அவரின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டி இருக்கிறது.**

*** இந்தப் போராட்டத்தை முன்னெடுத்த இளைஞர்களுக்கு அதன் மூலம் தாங்கள் சுய அரசியல் செய்ய வேண்டும், தமக்கு அரசியல் லாபம் தேட வேண்டும் என்று சிந்தனை இருக்கவில்லை. அவர்கள் தேசிய பொதுநல நோக்கில் தம்நலம் துறந்து இதில ஈடுபட்டனர்.**

*** அவர்களைப் பொறுத்தவரை அவர்கள் ஆரம்பித்த போராட்டம் இன்னும் முடிந்து விடவில்லை. அது தனது இலக்கை இன்னும் அடையவில்லை என்பதுதான் அவர்களது கருத்து நிலைப்பாடு.**

*** இதுவரை நடந்த போராட்டத்தினால் அரசியல் அதிகார லாபமீட்டிய ரணில் விக்கிரமசிங்க, அதன் மூலம் போராட்டத்தை அந்தளவில் மழுங்கடித்து விட்டு, முதல் கட்டம் முடிந்து விட்டது என இப்போது ஒருதலைப் பட்சமாகத் தமக்கு வசதியாக அறிவிக்கிறார்.**

*** தம்முடைய அரசியல் இலக்கும் நோக்கும் தேவையும் பூர்த்தி செய்யப்பட்டு விட்டமையால் போராட்டத்தின் முதல் கட்டம் முடிந்து விட்டதாக அறிவிக்கும் ரணில், இப்போது தமது எஞ்சிய இலக்குகளை எட்டுவதற்காக அதே போராட்டத்தின் முதல் கட்டம் என்ற அத்திபாரத்தின் மீது தமக்கு வசதியான போராட்டம் ஒன்றைக் கட்டியெழுப்ப முயற்சிக்கின்றார்.**

*** அவர் வகுக்கும் முதல் கட்டப் போராட்டத்தில் ரணில் பங்காளி கூட இல்லை. அவர் பார்வையாளரும் அதன் மூலம் லாபமீட்டிய பயனாளியும்தான்.**

*** 'கறையான் புற்றெடுக்கப் பாம்பு குடி கொண்ட கதையாக' ரணில் குறிப்பிடும் இளைஞர்களின் போராட்டம் சூடு பிடிக்க, அந்த அரசியல் சமய சந்தர்ப்பத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டவர்தான் ரணில் விக்கிரமசிங்க.**

*** அவரே இன்று முதலாவது போராட்டம் என்று கூறும் நடவடிக்கையின் மூலம் முதலில் பயனடைந்தவர். ஆனால் அந்தப் போராட்டத்தை பொறுத்தவரை அவர் தார்மீக ரீதியில்தன்னும் நேர்மையாக நடந்தவர் அல்லர். அந்தப் போராட்டம் மூலம், இதுவரைத் தாம் கனவு கண்டும் கிடைக்காத ஜனாதிபதி பதவியை, அதிர்ஷ்ட வாய்ப்பாகப் பெற்றுக் கொண்டு, அந்தப் போராட்டத்தை முன்னெடுத்தவர்கள் மீது சட்டத்தின் பெயரால் அரச பயங்கரவாதத்தை ஏவி விட்டவர் என்ற விமர்சனத்திற்கும் உள்ளாகி இருக்கின்றார்.**

**– எனவே நடந்த போராட்டம் முதல் கட்டம் முடிவடைந்து விட்டதாக அதை வகுத்து, அறிவித்து, அதன் அடிப்படையில் அடுத்த கட்டப் போராட்டத்தை முன்னெடுப்போம் என பிரகடனப்படுத்தவும், அதன் அடிப்படையில் மக்களுக்கு அழைப்பு விடுக்கவும் அவருக்கு தகுதியும் இல்லை, உரித்தும் கிடையாது என்பதுதான் நிஜமான நிலைமையாகும்.**

# முன்னாள் ஜனாதிபதி கோட்டாவிற்கு அரசியலில் ஈடுபடும் எண்ணம் இல்லை!

### அவரின் கட்சிச் செயலர் சாகர தெரிவிப்பு




முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அவர் தனது எதிர்கால அரசியல் தொடர்பில் எந்தவொரு நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தவில்லை.

அவருக்கு மீண்டும் அரசியலில் ஈடுபட வேண்டும் என்ற எண்ணம் இருப்பதாகவும் தெரியவில்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

எனினும் பொதுஜன பெரமுனவுடன் ராஜபக்ஷக்களின் அரசியல் தொடரும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பத்தரமுல்லையிலுள்ள பொதுஜன பெரமுன அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

அரசாங்கத்திலிருந்து விலகிச் சென்ற சிறிய கட்சிகளின் தலைவர் ஆரம்பத்தில் சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதைத் தவிர வேறு மாற்று வழி இல்லை என்று கூறினர்.

ஆனால் தற்போது சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதால் எவ்வித தீர்வும் கிடைக்கப் போவதில்லை என்று கூறுகின்றனர். இவ்வாறு கொள்கையற்றவர்களாக இருக்கும் அவர்களது புதிய அரசியல் கூட்டணி தொடர்ந்தும் பயணிக்காது.

கொள்கைகள் இன்றி நாட்டின் எதிர்காலத்துடன் விளையாட வேண்டாம் என்று அவர்களிடம் தெரிவித்துக் கொள்கின்றோம். ராஜபக்ஷக்களின் அரசியல் பொதுஜன பெரமுனவுடன் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படும்.

அவர்கள் ஆர்ப்பாட்டங்களின் போது பதவிவிலகியமைதவறுஎன்பதேஎன்னுடைய தனிப்பட்ட கருத்தும், கட்சியில் பெரும்பாலானவர்களின் நிலைப்பாடும் ஆகும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை 69 லட்சம் மக்களே தெரிவு செய்தனர். மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக்கப்படுவார் என்று அறிவிக்கப்பட்டமையாலேயே நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை மக்கள் வழங்கினர்.

எனவே அவர்களைப் பதவியிலிருந்து நீக்கும் அதிகாரமும் அம்மக்களுக்கே காணப்படுகிறது. மாறாக வீதியில் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தவர்களுக்கு அந்த அதிகாரம் கிடையாது.

எனவே நாம் தொடர்ந்தும் மக்களுடன் பயணிப்போம். ராஜபக்ஷக்களும் பொதுஜன பெரமுனவும் தமக்கு வேண்டுமா இல்லையா என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் இடம்பெற்ற கலந்துரையாடல்களில் அவர் தனது எதிர்கால அரசியல் பயணம் தொடர்பாக எந்தவொரு நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தவில்லை. அவருக்கு மீண்டும் அரசியலில் ஈடுபட வேண்டும் என்ற எண்ணம் இருப்பதாகவும் தெரியவில்லை. – என்றார்.

# அரசை சீர்குலைத்து நாட்டை வங்குரோத்துக்கு கொண்டு செல்வதே எதிர்க்கட்சிகளின் நோக்கம்!

### ரோஹித குற்றச்சாட்டு

அரசாங்கத்தை சீர்குலைத்து நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு செல்வதே எதிர்க்கட்சிகளின் பிரதான இலக்காக மாறியுள்ளது என முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கான சர்வதேச நாணய நிதியத்தின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் பொதுஜன பெரமுன செயற்பட்டாலும் அதற்கு எதிர்க்கட்சிகளின் ஆதரவு கிடைக்காது என்றும் குறிப்பிட்டார்.

பத்தரமுல்லையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன இவ்வாறு தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத் திட்டத்துக்கு ஆதரவளிக்காவிட்டால் நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை முன் வைக்குமாறு எதிர்க்கட்சிகளிடம் அவர் கேட்டுக்கொண்டார்.

நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்துள்ளதை தாம் ஒப்புக்கொள்வதாகவும், சர்வதேச நாணய நிதியத்தை மட்டும் பார்க்காமல் நாட்டை உயர்த்த அவசர வேலைத்திட்டத்தை அமுல்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

நாடு பொருளாதார ரீதியில் மிகவும் நெருக்கடியான சூழ்நிலையில் இருந்தாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் பொருளாதாரப் பிரச்சினையில் இருந்து மீள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

# பாதாள உலக குழுவுக்கு ஆயுதங்கள் விற்பனையாம்!

### முன்னாள் விமானப்படை அதிகாரி தகவல்



இராணுவம், பாதாள உலக குழு உறுப்பினர்களுக்கு ஆயுதங்களை விற்பனை செய்துள்ளதாக முன்னாள் விமானப்படை அதிகாரி ஒருவர் அம்பலப்படுத்தியுள்ளார்.

சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர் மின்னேரிய இராணுவ முகாமில் இருந்து 133 ரி – 56 துப்பாக்கிகள் திருடப்பட்டு பாதாள உலக உறுப்பினர்களுக்கு விற்பனை செய்யப்பட்டன என முன்னாள் விமானப்படை அதிகாரியும் ஊடகவியலாளருமான கீர்த்தி ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இணைய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். நாடளாவிய ரீதியில் இடம்பெறும் பல குற்றச்செயல்களில் பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் உரிய துப்பாக்கிகளைப் பயன்படுத்துகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சம்பவத்துடன் பொது பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு செயலாளர் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி மற்றும் பல ஊடகவியலாளர்களின் பெயர்களை இணைத்து அவர் இந்தக் குற்றச்சாட்டை முன் வைத்துள்ளமை விசேட அம்சமாகும்.





# கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

# Ishwaryam Banquet Hall

Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





## FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

## வெலிக்கடை, மகஸினில் ................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரால் இன்று வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

விடுதலைப் புலிகளின் மீளுருவாக்கம் என்று பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு வெலிக்கடை மற்றும் மகஸின் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் தாம் கைதுசெய்யப்பட்ட நாள்களில் இருந்து இன்று வரை நீதிமன்றத்துக்கு அழைக்காதிருக்கின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், நியாயம் கோரியும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றனர்.

இந்த விடயத்தில் அரசும், நீதி அமைச்சும் கவனம் செலுத்தி இவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதோடு நியாயத்தை நிலைநாட்டுமாறு அரசியல் கைதிகளை விடுதலைசெய்வதற்கான தேசிய அமைப்பு அவசர வேண்டுகோளை விடுகின்றது.

வடக்கு, கிழக்குத் தமிழர்களை அடக்குமுறைக்குள் வைத்திருப்பதற்காகவும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் தொடர்ந்து அமுல்படுத்துவதற்கான நியாயத்தைக் கற்பிக்கவும் சர்வதேசத்தை ஏமாற்றும் புலி உருவாக்கம் என அண்மைய காலங்களில் தமிழ் இளைஞர்கள் தொகையாகக் கைது செய்யப்பட்டனர்.

சர்வதேசத்தை நம்ப வைப்பதற்காகவும், பயங்கரவாதத் தடைச்ச சட்டத்தில் கைதுசெய்யப்பட்ட அரசியல் கைதிகளை விடுவிக்கின்றோம் என்று வெளி உலகத்துக்குக் காட்டவும் கடந்த இரண்டு, மூன்று வருடங்களில் புலி உருவாக்கும் எனக் கைது செய்யப்பட்டவர்களில் ஒரு சிலரை ஆட்சியாளர்கள் பிணையில் விடுவித்தனர்.

மீதமுள்ளவர்களுக்கு எதிரான வழக்கை நீதிமன்றம் எடுக்காது காலத்தை இழுத்தடிப்புச் செய்வது நியாயத்தை மறுக்கும் திட்டமிட்ட செயலாகும். இதனை அனுமதிக்க முடியாது.

இந்நிலையில் இவர்கள் தமக்கு நியாயம் வேண்டியும், ஒட்டுமொத்த அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை அவர்கள் ஆரம்பித்திருக்கின்றமை அவர்கள் குடும்பத்தாரை கவலையில் ஆழ்த்தியுள்ளது. அவர்களை உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் இருந்து மீட்குமாறும், உடல் நிலையைக் கவனத்தல் கொண்டு அவர்களை விடுதலையை வலியுறுத்துமாறும் கேட்கின்றனர்.

அரசியல் கைதிகளாக பல ஆண்டுகளாக சிறையில் வாடுவோர் தமது விடுதலைக்காகப் பல தடவைகள் போராட்டம் நடத்தி உள்ளமையோடு சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தையும் நடத்தியுள்ளனர்.

அரசியல்வாதிகளின் வாக்குறுதிகளை நம்பி அத்தகைய போராட்டங்கள் கைவிடப்பட்டாலும் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான எதிர்பார்ப்பு இன்று வரை நிலைநாட்டப்படவில்லை. இந்நிலையில், அவர்களும் மீண்டும் தமது விடுதலைக்கான போராட்டத்தை ஆரம்பிக்கும் வாய்ப்பே உள்ளது.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடர் ஆரம்பமாகவிருக்கும் காலகட்டத்தில் மிக அண்மையில் கைது செய்யப்பட்டவர்களில் ஒரு சிலரை பிணையில் அனுப்பிவிட்டு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாக அரசு நாடகமாடும் வாய்ப்பு உள்ளது.

இந்நிலையில் தமிழ் அரசியல் தலைமைத்துவங்கள் இதனைக் கருத்தில் கொண்டு உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோரின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்ற அரசுக்கு அழுத்தம் கொடுப்பதோடு ஒட்டுமொத்த அரசியல் கைதிகளும் விடுதலையாகுவதற்கு கூட்டுச்செயற்பாட்டை முதன்மைப்படுத்துமாறு அரசியல் கைதிகளின் பெற்றோரோடு அரசியல் கைதிகளின் தேசிய அமைப்பும் கேட்டுகொள்கின்றது என்றுள்ளது.

## மணப்பெண்ணை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேரவில்லை. எனினும் கார் பலத்த சேதங்களுக்குள்ளாகியுள்ளது.

இதனையடுத்து திருமண மண்டபத்துக்குச் செல்வதற்கு இன்னுமொரு மாற்று வாகனத்தை ஏற்பாடு செய்யும் வரை மணப்பெண்ணும் உறவினர்ளும் வீதியில் நின்றிருந்தனர்.

## அரசியற் கட்சியின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியற் கட்சியொன்றின் யாழ். மாவட்ட அமைப்பாளர் உள்ளிட்ட இருவர், இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை புலனாய்வு செய்யும் ஆணைக் குழுவால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

தம்மை 50 ஆயிரம் ரூபா பணத்துடன் வருமாறு அறிவிக்கப்பட்டதாக ஆணைக் குழுவில் அந்தப் பெண் முறைப்பாடு அளித்துள்ளார்.

புறக்கோட்டையிலுள்ள உணவகம் ஒன்றில் வைத்து பணத்தைப் பெற முயன்றபோது, இருவரும் கையும் காசுமாகக் கைது செய்யப்பட்டனர் என ஆணைக்குழு மன்றுக்குத் தெரியப்படுத்தியுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622






# சந்திரிக்கா காலம் முதல் மஹிந்த காலம் வரை வடக்கு, கிழக்கு போஷாக்கின்மையால் பாதிப்பு!

## இன்று சிங்கள தேசம் அதை உணர்கிறது என்கிறார் சிறிதரன்



வடக்கு கிழக்கில் கடந்த 30 ஆண்டு போர்க்காலத்தில் ஏற்பட்டிருந்த போசாக்கின்மையை நாட்டில் உள்ள சிங்கள சகோதரர்கள் யோசிக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் போசாக்கின்மை தொடர்பில் நாடாளுமன்றத்தில் பேசப்படுகின்றபோது, அரசாங்க அமைச்சர்கள் பிரசன்னமாகியிருக்கவில்லை என்பது சுட்டிகாட்டப்பட வேண்டிய விடயமாகும்.

இதேவேளை, நாட்டில் போசாக்கின்மை தொடர்பாக பேசப்படுகின்ற போது, வடக்கு கிழக்கில் கடந்த 30 ஆண்டு போர்க்காலத்தில் ஏற்பட்டிருந்த போசாக்கின்மையை நாட்டில் உள்ள சிங்கள சகோதரர்கள் யோசிக்க வேண்டும்.

போசாக்கின்மையால் அதிகமாக பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் கிளிநொச்சி மாவட்டமே முதன்மையான மாவட்டமாகும்.

சந்திரிக்கா காலம் முதல் மஹிந்த காலம் வரையில் வடக்கு கிழக்கில் உணவுத்தடை விதிக்கப்பட்டு மக்கள் கஷ்டப்பட்டு இறந்த நிலைமையை இன்று சிங்கள மக்களால் தென்னிலங்கையில் பார்க்க முடிகிறது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய இடங்களில் கடலட்டைக்காக வழங்கப்பட்டுள்ள இடங்களில் சீனாவின் நிறுவனம் ஒன்றில் செயற்பாடு காரணமாக உள்ளூர் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சீன நிறுவனத்தால், அங்குள்ள மக்கள் போஷாக்கின்மை உள்ளவர்களாக மாற்றப்பட்டுள்ளனர்.

தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட போர் குற்றங்களுக்கு ஆதரவாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் பேசும் சீனா, இலங்கையின் அமைதியின்மையில் மறைமுகமாக மோசமாக செயற்பட்டு வருகிறது.

கிளிநொச்சியில் கடல் தொழிலுக்கு சென்ற ராசரட்ணம் நிமால் என்பவர் கடற்படையினரால் தாக்கப்பட்டுள்ளார். இதற்கு எந்தக் காரணங்களும் இல்லை.

எனினும் கடற்படையினர் மதுபோதையில் இருந்தால், தமிழர்கள் தாக்கப்படுகின்ற நிலை உருவாகியுள்ளமையே இதனை உணர்த்துகிறது.

பச்சிலைப் பள்ளியில் இராணுவத்திற்கு 1840 ஏக்கர் காணியைக் கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் 14 ஆயிரம் பேருக்கு காணியில்லை. கிளிநொச்சியில் 4000 பேருக்கு காணியில்லை.

எனினும் பலாலியில் படையினர் 3000 ஏக்கரில் தோட்டம் செய்கின்றனர். கொஞ்சம் என்றாலும் மூளையை பாவியுங்கள்! இராணுவம் தோட்டம் செய்வதன் மூலம் நாட்டின் போஷாக்கின்மையை தீர்க்கமுடியுமா?

இந்தநிலையில் 80 வருட இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பதற்காகவே மாகாணசபை கொண்டு வரப்பட்டது.

எனினும் வடக்கு மாகாணத்தில் தகுதியுள்ள அரச சேவையாளர்கள் இருக்கின்ற போதும், அங்கு சிங்களவர்கள் நியமிக்கப்படுகின்ற நிலைமை, ஆக்கிமிப்பு செயற்பாடாகும்.' – எனக் கூறியுள்ளார்.

## இலங்கை அரசாங்கத்தால் பாகிஸ்தானுக்கு நன்கொடை!

பாகிஸ்தானில் கடந்த வாரங்களில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கை அரசாங்கம் தேயிலையை நன்கொடையாக வழங்கியுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் உமர் பாரூக் பூர்கியிடம், வெளிவிவகார அமைச்சில் வைத்து இதனைக் கையளித்துள்ளார்.

இந்த சந்திப்பின் போது, வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் அமைச்சர் அனுதாபங்களைத் தெரிவித்தார் என வெளியுறவு அமைச்சகம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை பாகிஸ்தானுக்கு இலங்கை அரசாங்கத்தினதும், மக்களதும் ஆதரவு என்றும் இருக்கும் எனவும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டுள்ளார்.

## வெடி பொருள்களுடன் சந்தேகநபர் ஒருவர் பதுளையில் வைத்து கைது!



பதுளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெந்தகொல்ல பகுதியில் வெடி பொருள்களுடன் நபரொருவர் நேற்று (புதன்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளார்.

பதுளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெந்தகொல்ல பகுதியில் சட்ட விரோதமான முறையில் வெடி பொருள்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன என பதுளை விசேட பொலிஸ் பிரிவுக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து, பதுளை குற்றத்தடுப்பு பொலிஸாரும், பதுளை விசேட பொலிஸ் பிரிவினரும் இணைந்து பதுளை கெந்தகொல்ல பகுதிக்கு விரைந்து, சந்தேகத்துக்கிடமான வீட்டை சுற்றி வளைத்தனர்.

இதன்போது மிகவும் சூட்சுமமான முறையில், மறைத்து வைக்கப்பட்டிருந்த டெட்டனேட்டர் 5, ஜெலட்டின் குச்சிகள் 3, 6 மீற்றர் வயரும், அமோனியம் 2 கிலோ 630 கிராமும், வெடிமருந்து 967 கிராமும், கஞ்சா போதைப் பொருள் 10 கிராமும் சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த சந்தேக நபர் 29 வயதுடைய அதே இடத்தைச் சேர்ந்தவர் என்பதோடு, விசாரணைகளின் பின்னர் சந்தேக நபரை பதுளை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக, பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

## மின்னுயர்த்தி பழுதடைந்தமையால் வீடுகளில் முடங்கும் தெற்கு மக்கள்!

மின்சார உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் விதித்துள்ள கட்டுப்பாடுகள் மற்றும் தடைகள் காரணமாக மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு ஆளாகிவருகின்றனர்.

குறிப்பாக பழுதடையும் மின்னுயர்த்திகளுக்கான சில உதிரிப்பாகங்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால் அவற்றைப் பழுதுபார்க்கமுடியாத நிலையேற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பைப் பொறுத்தமட்டில் பெரும்பாலானோர் உயர்ந்த தொடர்மாடி வீடுகளிலேயே வசித்துவருகின்றனர். குறித்த தொடர்மாடி வீடுகள் 10 தொடக்கம் 35 வரையான மாடிகளைக் கொண்டிருப்பதுடன் மின்னுயர்த்திகள் மூலமாகவே அவற்றை இயக்க வேண்டிய நிலையும் காணப்படுகின்றது.

தொடர்மாடி வீடுகளில் வசிப்போரின் மின்னுயர்த்திகள் செயலிழந்தாலோ அல்லது மின்சாரம் தடைப்பட்டாலோ மக்கள் தங்கள் வீடுகளிலிருந்து வெளியில் வரமுடியாமலும், வெளியிலிருந்து உள்ளே செல்லமுடியாமலும் பெரும் அசௌகரியத்தை எதிர்நோக்குகின்றமை தவிர்க்கமுடியாதது.

தொடர்மாடி வீடுகளுக்கு மாத்திரமன்றி, வைத்தியசாலைகள், நட்சத்திர விடுதிகள் என அனைத்துக்கும் இதே கதியே ஏற்படும். மேலும் வயோதிபர் மற்றும் நோயாளர்கள் இதனால் வெகுவாகப் பாதிக்கப்படுவார்கள்.

அந்தவகையில், கொழும்பு, கொள்ளுப்பிட்டி அல்பிரட் ஹவுஸ் பகுதியில் அமைந்துள்ள சுமார் 30 குடும்பங்கள் வசிக்கும் தொடர்மாடி ஒன்றில் மின்னுயர்த்தி செயலிழந்ததன் காரணமாக அங்கு குடியிருக்கும் மக்கள் கடந்த ஒரு மாதத்துக்கும் அதிகமான காலம் மிகுந்த சிக்கல்களை எதிர்நோஜக்கிவருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அங்கு வசிக்கும் வயோதிபர்கள் மற்றும் நோயாளர்கள் தங்கள் குடிமனைகளில் இருந்தும் வெளிவரமுடியாது வீடுகளிலேயே 'சிறைப்பட்டுள்ளனர் எனக் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனத்துக்கு அறிவித்தபோது, குறித்த மின்னுயர்த்தியைத் திருத்தியமைக்கத் தேவையான உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்ய அரசாங்கம் அனுமதியளிக்கவில்லை என்றும் டொலர் பிரச்சினை காரணமாகவே அவற்றைக் கொள்வனவு செய்யமுடியாத நிலை காணப்படுவதாகவும் கையை விரிக்கின்றனர்.

இதனால் அப்பாவி மக்களே பாரிய சிரமங்களை எதிர்நோக்கவேண்டிய நிலை காணப்படுகின்றது. அந்த வகையில் மக்களின் அத்தியாவசிய தேவைகளுடன் தொடர்புடைய மின்சார உதிரிப்பாகங்களையேனும் இறக்குமதி செய்வதற்கான அனுமதியை வழங்கவேண்டியது அவசியமாகும்.

இதுவரைகாலம் அனைத்துவிதமான இயந்திரங்கள் மற்றும் மின்சார சாதனங்களுக்கும் வெளிநாடுகளிலேயே தங்கியிருந்த நிலையில், தற்போது அவற்றின் உதிரிப்பாகங்களுக்குத் தடைவிதிக்கப்படும் பட்சத்தில் எவ்வாறு அவற்றை இயக்குவது, பழுதுபார்ப்பது என மக்கள் கேள்வியெழுப்புகின்றனர். எனவே அரசாங்கம் இந்த விடயத்தில் துரித நடவடிக்கை எடுக்கமுன்வரவேண்டும்.

## 300 எரிபொருள் நிரப்பு நிலையங்களை மூடுதல்: இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் விளக்கம்

எரிபொருள் இன்மையால் நாளாந்தம் சுமார் 300 எரிபொருள் நிரப்பும் நிலையங்களை மூட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் உண்மைக்கு புறம்பானவை என்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கூட்டுத்தாபனத்தால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

எரிபொருள் இன்மையால் நாளாந்தம் சுமார் 300 எரிபொருள் நிரப்பும் நிலையங்களை மூட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் உண்மைக்குப் புறம்பானவையாகும்.

எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு எரிபொருளை விநியோகிப்பதற்காக வழமையை விட அதிக பவுஸர்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு தனியார் பவுஸர் உரிமையாளர்கள் சங்கம் மற்றும் பெற்றோலிய கூட்டுத்தாபனம் என்பன இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளன.

கொலன்னாவை மற்றும் முத்துராஜவெல முனையங்களும், சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்தீகரிப்பு நிலையமும் தொடர்ந்தும் இயங்கி வருகின்றன.

சில ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகளைப் போன்று எந்தவொரு எரிபொருள் நிரப்பும் நிலையத்தையும் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

முறையற்ற வகையில் எரிபொருள் விநியோகத்தை தவிர்ப்பதற்காகவே மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் ஆலோசனையுடன் மட்டுப்படுத்தப்பட்டளவில் எரிபொருள் விநியோகிக்கப்படுகிறது.

தற்போது நாளாந்தம் இரு முனையங்களிலிருந்தும் சுமார் 4000 மெற்றிக் தொன் டீசலும், 3000 மெற்றிக் தொன் பெற்றோலும் விநியோகிக்கப்படுகிறது.

இது எரிபொருள் தட்டுப்பாடு காணப்பட்ட காலத்தில் விநியோகிக்கப்பட்டதை விட அதிகமாகும். எனவே எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் மூடப்படுகின்றன என வெளியாகியுள்ள செய்திகள் உண்மைக்கு புறம்பானவை என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# பொறுப்புக்கூற வேண்டிய தேவை எனக்கு கிடையாது!

## கையைவிரித்தார் மஹிந்தானந்த



எமது அரசாங்கம் இரசாயன உரத்தை தடை செய்து ஒரே நாளில் உரம் தொடர்பான கொள்கை மாற்றியமைத்ததால் நாட்டின் விவசாயத்துறை பாதிக்கப்பட்டது என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

தவறான தீர்மானத்தை அரசாங்கம் 06 மாத காலத்துக்குள் திருத்திக்கொண்டது. சீன உரக் கப்பல் விவகாரத்துக்கு நான் பொறுப்புக்கூற வேண்டிய தேவை கிடையாது,அதற்கான அவசியமும் இல்லை என முன்னாள் விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற பிள்ளைகள் மற்றும் தாய்மாரின் மந்தபோசணை தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தின் போது உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் உரம் தொடர்பிலான கொள்கையை மாற்றியமைத்ததால் விவசாயத்துறை பாதிக்கப்பட்டது என எதிர் தரப்பின் உறுப்பினர் குறிப்பிட்டதை ஏற்றுக் கொள்கிறேன். உரம் தொடர்பான தவறான கொள்கை ஒருபோகத்தில் மாத்திரம் பாதிப்பை ஏற்படுத்தியது, தவறை திருத்திக்கொண்டோம்.

இரசயான உரம் தடை தொடர்பான தீர்மானம் 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் எடுக்கப்பட்டது. இடைப்பட்ட காலத்துக்குத் தேவையான இரசாயன உரம் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. பெரும்போகத்தில் தான் உரத் தட்டுப்பாடு ஏற்பட்டது, இதனால் தான் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

சேதனப் பசளை தொடர்பான திட்டம் தவறல்ல, அதனை ஒரே தடவையில் அமுல்படுத்தியது தான் தவறு, கட்டம் கட்டமாக செயற்படுத்தியிருக்கலாம்.கடந்த காலங்களில் மக்களால் விமர்சிக்கப்படாத அரசியல்வாதி எவரும் கிடையாது. பிறரது குழந்தைக்கு பிறப்பு சான்றிதழ் வழங்கச் சென்றதால் எனது உருவ பொம்மையை மக்கள் எரித்தார்கள்.

விவசாயத்துறை அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்யும் போது உரம் தொடர்பான விடயதானம் எனக்கு பொறுப்பாக்கப்படவில்லை.

விவசாயத்துறை திணைக்களம், விவசாய காப்புறுதி திணைக்களம் மாத்திரமே என்னிடமிருந்து.உரம் தொடர்பில் இரு இராஜாங்க அமைச்சர்கள் இருந்தார்கள்.

சேதன பசளை தொடர்பிலான கொள்கையை அரசாங்கம் முன்னெடுக்கும் போது இரசாயன உரத்தை இறக்குமதி செய்வதற்கான அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பித்திருந்தேன்.ஆனால் அப்போது ஜனாதிபதி இரசாயன உர இறக்குமதி மற்றும் பாவனை மீதான தடைக்கான பத்திரத்தை அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார்.

இரசாயன உர இறக்குமதி செய்வதை தடை செய்யும் அமைச்சரவை பத்திரத்துக்கு அன்று எதிர்ப்பு தெரிவித்தேன். சேதன பசளைத் திட்டத்தைக் கட்டம் கட்டமாக செயற்படுத்துவோம். – என்றேன். கலக்கமடைய வேண்டாம், சேதன பசளை திட்டத்துக்காக ஜனாதிபதி செயலணி நியமிக்கப்படும். இதற்காக இரு இராஜாங்க அமைச்சு நியமிக்கப்படும் என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சேதன பசளை திட்டம் தொடர்பில் ஜனாதிபதி செயலணி ஒரு நாள் கூட கூடவில்லை, சுகாதார மற்றும் சுற்றாடற் துறை அமைச்சும் சேதன பசளை திட்டம் தொடர்பாகக் கவனம் செலுத்தவில்லை. நியமிக்கப்பட்ட இரு இராஜாங்க அமைச்சும் கருததுரைக்கவில்லை. முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவிற்காக கருத்துரைத்தேன். சீன கப்பல் விவகாரத்துக்கு நான் பொறுப்பு கூற வேண்டியவனல்லன்,அது எனது பொறுப்பல்ல, இவ்வளவு காலம் நான் இதனை குறிப்பிடவில்லை. சீன உர மனுகோரல் பகிர்ந்தளிப்பு தொடர்பான நவடிக்கைகளில் நான் தலையிடவில்லை.விவசாயத்துறை அமைச்சர் என்ற ரீதியில் சீன உரக் கப்பல் தொடர்பில் பரிசீலனை செய்தேன்.

சீன உரக் கப்பல் விவகாரத்தில் எவ்வித முறைகேடும் இடம்பெறவில்லை. சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமையவே அனைத்து நடவடிக்கையும் எடுக்கப்பட்டன. விவசாய உரம் தொடர்பான தவறான கொள்கையை அரசாங்கம் ஆறு மாத காலத்துக்குள் திருத்திக்கொண்டது. – என்றார்.

## மஸ்கெலியா பகுதியில் குளவி கொட்டுக்கு இலக்காகி 18 தொழிலாளர்கள் காயம்





மஸ்கெலியா – நல்ல தண்ணி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட லக்ஸ்சப்பான எமில்டன் தோட்டத்தில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த தொழிலாளர்கள் 18 பேர் குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று (புதன்கிழமை) காலை இடம்பெற்றுள்ளது.

குளவி கொட்டுக்கு இலக்காகிய தொழிலாளர்கள் மஸ்கெலியா ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களில் 5 ஆண்களும் கர்ப்பிணிப்பெண் உட்பட 13 பெண்கள் அடங்குகின்றனர்.

மலையகத் தோட்டப்புற பகுதிகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் இவ்வாறு அடிக்கடி குளவிக் கொட்டுக்கு இலக்காகும் செய்திகள் வெளிவருகின்றன.

ஆனால் அதற்கான எவ்விதமான பாதுகாப்பு ஏற்பாடுகளையும் தோட்ட நிர்வாகங்கள் இதுவரை செயற்படுத்துவதாகத் தெரியவில்லை.

அதேநேரம் தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை குளவிக் கொட்டுக்கு ஆளாகும்போது அவர்களுக்கு எவ்விதமான நட்டஈடும் வழங்கப்படுவதில்லை.

தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில் மக்களின் வாழ்வாதாரம் பாதிப்படைந்துள்ள நிலையில் இவ்வாறான விபத்துகளில் தோட்டத் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றமை தொடர்பில் உரிய அதிகாரிகள் கரிசணைக் கொள்ள வேண்டியது கட்டாயமாகும்.

## இந்தியாவிலிருந்து இலங்கை திரும்புபவர்களுக்கு அரச காணி வழங்குவதற்கு ஆளுநர் நடவடிக்கை

இந்தியாவிலிருந்து இலங்கைக்குத் திரும்பும் வடமாகாணத்தை சேர்ந்தவர்களுக்கு அரச காணி வழங்குவதற்கு வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் காரணமாகத் தமிழ் நாட்டில் சுமார் 58 ஆயிரம் மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ள நிலையில் அவர்களில் சுமார் 3 ஆயிரம் பேர் மீள இலங்கைக்குத் திரும்பவுள்ளனர்.

ஏற்கனவே ஒரு பகுதியினர் இலங்கைக்கு திரும்பியுள்ள நிலையில் படிப்படியாக தாய் நாட்டுக்கு வருகை தருபவர்களுக்கு சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வருகை தரும் குடும்பங்களில் காணி அற்றவர்களுக்கு அரச நிலம் பகிர்ந்தளிப்பது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், இந்தியாவிலிருந்து வருகை தரும் இலங்கை மக்களுக்கு இந்திய அரசு வழங்கும் வீட்டுத் திட்டத்தின் நிதியை அதிகரிக்குமாறும் இந்திய அரசை கேட்டுக்கொண்டுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## யாழ். சுண்டிக்குளி கல்லூரி மாணவி கிருஷாந்தி படுகொலை செய்யப்பட்டு 26 ஆண்டுகள் நிறைவு





யாழ்ப்பாணம், செம்மணி பகுதியில் படுகொலை செய்யப்பட்ட சுண்டிக்குளி கல்லூரி மாணவி குமாரசாமி கிருஷாந்தியின் 26 ஆவது ஆண்டு நினைவு தினம் செம்மணி பகுதியில் நேற்று (புதன்கிழமை) அனுஷ்டிக்கப்பட்டது.

அதன் போது செம்மணி பகுதியில் படுகொலை செய்யப்பட்ட ஏனையவர்களும் நினைவு கூரப்பட்டதுடன் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

1996 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி யாழ். சுண்டிக்குளி கல்லூரி மாணவி கிருஷாந்தி (வயது 18) வீதியால் சென்று கொண்டிருந்த வேளை செம்மணி பகுதியில் அப்போதிருந்த இராணுவ காவலரணில் வழிமறித்த இராணுவத்தினர் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தி கழுத்தை நெரித்து படுகொலை செய்திருந்தனர்.

செம்மணி இராணுவ காவலரணில் கிருஷாந்தியை தடுத்து வைத்திருந்ததை ஊரவர்கள் கண்ணுற்று மாணவியின் தாயாரிடம் கூறியதை அடுத்து, மாணவியின் தாயாரான ஆசிரியை குமாரசாமி இராசம்மா (வயது 59) மாணவியின் சகோதரனான யாழ்.பரியோவான் கல்லூரி மாணவனான குமாரசாமி பிரணவன் (வயது 16) மற்றும் மாணவியின் வீட்டுக்கு அயல் வீட்டில் வசிக்கும் தென்மராட்சி பல நோக்கு கூட்டுறவு சங்கத்தில் உதவியாளராகக் கடமையாற்றிய சிதம்பரம் கிருபாமூர்த்தி (வயது 35 ) ஆகியோர் மாணவியை தேடி சென்று செம்மணி இராணுவ காவலரணில் விசாரித்த வேளை அவர்கள் மூவரையும் இராணுவத்தினர் படுகொலை செய்தனர்.

அன்றைய தினம் நள்ளிரவு படுகொலை செய்யப்பட்ட நால்வரின் உடல்களையும் செம்மணி பகுதியில் உள்ள வயல் வெளியில் இராணுவத்தினர் புதைத்தனர்.

அதேவேளை யாழில் அக்கால பகுதியில் கடத்தப்பட்டவர்கள் , காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சுமார் 600 இற்கும் அதிகமானவர்கள் செம்மணி வயல் வெளிகளில் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## ஆயுத கையளிப்பு வைபவம்



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 116**

பலாலி விமானப் படைத்தளத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்த வைபவத்தை பார்வையிட, செய்திகள் சேகரிக்க நூற்றுக்கு மேற்பட்ட செய்தி நிருபர்கள், ஊடகவியலாளர்கள் பலநாடுகளில் இருந்தும் கூடியிருந்தனர். அவர்களுக்கு உள்ளே செய்திகளுக்குள் செய்திகள் சேகரிக்க உளவியல் துறை விற்பன்னர்களும் பின்னிப் பிணைந்திருந்தனர்.

விடுதலைப் புலிகள் தரப்பில் ஆயுதங்களைக் கையளிப்பதற்காக யோகிதான் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். ஆயினும் அவருக்குள்ளே அதனைச் செய்ய விரும்பாத ஓர் ஆக்ரோமும் சஞ்சலமும் பின்னியிருந்தமையை அவரது முக பாவங்களிலும், நடை, உடை பாவனைகளில் இருந்தும் அனுமானிக்கக் கூடியதாக இருந்தது. அவரது முகத்தில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கவிருக்கிறோம் என்ற மகிழ்ச்சிக் களை இருக்கவில்லை.

விடுதலைப் புலிகள் கையளிப்பதற்காகத் தேர்ந்தெடுத்திருந்த ஆயுதங்கள் இரண்டு சிறிய டிரக்குகளில் இருந்தன.



ஆயுதக் கையளிப்புக்கு முன்னர்



மேசையில் வைக்கப்பட்ட பிஸ்டல்

இவை யாவும் இந்தியா விடுதலைப் புலிகளுக்கு முன்னர் தந்திருந்த ஆயுதங்கள்.

இந்தியா சார்பில் கையளிப்பின் மேற்பார்வைக்காக அவர்களது மூத்த தளபதிகள் திபேந்தர் சிங்கும் ஹர்கிரட்சிங்கும் மற்றும் இந்தியப் படைகளின் முக்கிய அதிகாரிகளும் பங்குபற்றினார்கள். ஸ்ரீலங்கா தரப்பில் ஜனாதிபதி ஜே. ஆரைப் பிரதிநிதித்துவப்படுத்தி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தளபதி ஜெனரல் சேபால ஆட்டிகலவும் பல முக்கிய படைத் தளபதிகளும் வந்திருந்தார்கள்.

விடுதலைப் புலிகளின் தரப்பில் யோகி ஒரு ஜேர்மன் பிஸ்டலைத் செயலாளர் ஆட்டிகலவின் கைகளில் கையளித்து கைலாகு கொடுப்பது என்பது ஏற்பாடு. அதுவே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் யோகியோ எழுந்து வந்து விறைப்போடும் முறைப்போடும் அந்தப் பிஸ்டலை செயலாளர் ஆட்டிகலவின் கையில் கொடுக்காது, எந்தச் சலனமும் காட்டாமல், அவ்விடத்தில் இருந்த மேசையின் மீது வைத்து விட்டுத் தன்னிடத்திற்குத் திரும்பிச் சென்றார். எல்லோருக்கும் இது தூக்கி வாரிப் போட்டது. கைகுலுக்கியவாறு செய்தி தருவதற்கான தயாரிப்புடன் வந்த தளபதி ஆட்டிகலவுக்கு முகம் சுருங்கி விட்டது. ஆனாலும் நிலைமையைச் சமாளித்து, மேசையில் வைக்கப்பட்ட துப்பாக்கியின் (பிஸ்டலின்) மேல் தனது கைகளை வைத்து, "ஸ்ரீலங்காவின் எதிர்காலத்திற்கான சரித்திர முக்கியத்துவம் நிறைந்த நாள் இது. ஜனநாயகத்தின் ஒவ்வொரு நார்களையும் இதுவரை அழித்துக் கொண்டிருந்த வன்முறையை இந்த ஆயுதங்களை மீளத் தந்து கையளிப்பது முடிவுக்குக் கொண்டு வரும்" – எனக் கையோடு கொண்டு வந்த செய்தியைத் தெரிவித்தார்.

இந்தக் கையளிப்பின் வித்தைகளும், யோகியின் முக பாவங்கள், உடல் அசைவுகள் யாவும் பல செய்திகளைத் தெரிவிப்பனவாக உளவுத்துறையினரும் ஊடகங்களும் அர்த்தம் கற்பிக்க, இருந்த நம்பிக்கைகள் எல்லாம் குறுகி, ராஜீவ் காந்தியால் ஒத்துக் கொள்ளப்பட்ட புலிகளுக்கான. மாதாந்திரத் தொகை அதனை மேற்பார்வை செய்த கட்டமைப்புகளால் நிறுத்தப்பட்டது.

விடுதலைப் புலிகளோ இடைக்கால நிர்வாக அரசு நிறுவப்பட்ட பின் வாக்களிக்கப்பட்ட விதத்தில் அது பெரும்பான்மையுடன் தங்களது கைகளில் அமைந்தால் எஞ்சிய ஆயுதங்களைக் கையளிப்பார்கள் என அறிக்கை தந்தார்கள்.

நாவல் மரத்திலிருந்து சிறுவனான முருகனிடம் பசிக்கு சில பழங்களைப் பறித்துப் போடச் சொல்லி ஔவையார் கேட்க, முருகன் "பாட்டி சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?" எனக் கேட்டான் என்று திருவிளையாடல் கதை ஒன்று உண்டு.

"என்னப்பா இது பசிக்குப் பழம்தானே கேட்டேன்" – என்று பாட்டி சொல்ல, உலுப்பிய கொப்புகளில் இருந்து விழுந்த பழங்களை எடுத்து, மண்ணை அகற்ற ஔவையார் வாயினால் ஊத, "என்ன பாட்டி, பழம் சுடுகிறதா?" என முருகனான சிறுவன் கேட்டானாம். அவை இலக்கிய மொழி, பக்தி நளினங்கள், நயனங்கள், சாதுரியங்களையும் தத்துவங்களையும் சொன்னவை.

யோகியின் அந்த விதமான ஆயுதக் கையளிப்பும் விடுதலைப் புலிகளின் அங்கத்தினர்களுக்கு சாதுரியமானதும், தங்களை விட்டுக் கொடுக்கப் போவதில்லை, அடக்கி விட முடியாது என்பதற்கான வித்தையாகவுமே அர்த்தம் கொள்ளப்பட்டது. இவை அரசியல் தரப்புகளினாலும் பார்க்கப்பட்டு பல வியாக்கியானங்களுக்கும் உட்படுத்தப்பட்டன. நோக்கமே யோகிக்கு அதுவாக இருந்திருக்கலாம். ஆனால் தூரநோக்குகள் கணக்கெடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஓர் ஆயுதப் போராட்டம் தங்களுக்கு இடையேயான, அன்றில் சர்வதேச ஒத்தாசையால் பேச்சு வார்த்தைகளின் மூலம், தீர்வுக்கும் ஜனநாயக வழிக்கும் திரும்ப முயற்சிகள் மேற்கொள்ளப்படும் போது, ஆயுதங்கள் அக்காலங்களில் முடக்கப்பட்டு, பேச்சுவார்த்தைகளுக்கு வழி விடுவது சர்வதேச வழமை. எவ்வளவோ ஆயுதப் போராட்டங்கள், துணை சேர்த்து நடந்த விடுதலை போக்குகளில் ஒப்பந்த பேச்சு வார்த்தைகளின் நடைமுறை காலங்களில் அந்த ஆயுதங்கள் முடக்கப்பட்டமை சாதாரண நியதி. அதை மதியுரைஞர் பாலசிங்கமோ அன்றேல் விடுதலைப் புலிகளின் புலம்பெயர் புத்திஜீவிகளோ அறிந்திராதவர்கள் அல்லர்.

இந்தியப் படைகளின் வரவில் மகிழ்ச்சி கொண்டிருந்த தமிழ் மக்கள் தங்களைச் சுற்றி ஆயுதங்கள் இருந்த சூழலில் இவற்றைத் தங்களது இயலாத்தனத்தில் பொறுத்துத் தலையாட்டிக் கொண்டிருந்தார்கள். ஆனால், புலம்பெயர் தமிழ் அமைப்புக்களினது நிலைப்பாடுகளும், மௌனங்களும் சர்வதேசங்களுக்கும் புதிராக இருந்தன. சர்வதேசம் இந்த கையளிப்பு வித்தைகளை அனுதாபமாகப் பார்க்கவில்லை. எடுக்கப்படும் ஏதோ முயற்சிகள் கூட ஆப்பு வைப்பதற்காகவே என்று சந்தேக கண்களுடன் பார்த்தது. அவர்கள் முன்னிருந்த கேள்வி விடுதலைப் புலிகள் சுதந்திரத் தனி நாடு இல்லாத ஒரு சமாதானத்தை நோக்கி ஒத்துழைக்கப் போகிறார்களா அல்லது தங்களது உண்மை தன்மையற்ற நகர்வுகளுக்கான ஒத்திகைகளா இவை என்பது தான்.

(வளரும்.....)



புலிகள் கையளித்த் இரண்டு ட்ரக் ஆயுதங்கள்

# இலங்கை அரசில் எவ்வித நம்பிக்கையும் எமக்குக் கிடையாது காணாமலாக்கப்பட்டோருக்கு சர்வதேச விசாரணையே தேவை

## மன்னார் மாவட்டத் தலைவி மனுவல் உதயச்சந்திரா காட்டம்

தற்போதைய ஜனாதிபதி நல்லாட்சி அரசில் இருந்தார். அப்போது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் நல்லதொரு முடிவைத் தருவதாகக் கூறி இருந்தார். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை. தற்போது அவர் ஜனாதிபதியாகக் கண்ணை மூடிக்கொண்டு இருக்கிறார்.

இவ்வாறான சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு தாய்மார்களும், உறவுகளும் சர்வதேச விசாரணை மட்டுமே எமக்கு வேண்டும் என்ற கோரிக்கையில் உள்ளனர் என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று (புதன்கிழமை) மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகள் தொடர்பாக சர்வதேச விசாரணையே எமக்கு வேண்டும் என கோரி நாங்கள் கடந்த 13 வருடங்களுக்கு மேலாக சர்வதேசத்திடம் கோரி வருகிறோம்.

இலங்கை அரசில் எவ்வித நம்பிக்கையும் எமக்கு இல்லாத நிலையில் காணாமல், ஆக்கப்பட்ட உறவுகளுக்கு சர்வதேச விசாரணையே தேவை என்ற கோரிக்கையை நாங்கள் முன் வைத்தோம்.

ஆனால் 13 வருடங்களாகியும் எமது கோரிக்கை நிறைவேறவில்லை. எமது கோரிக்கை நிறைவேறும் நிலையில் இலங்கையில் இருந்து ஜெனிவா செல்கின்ற அமைச்சர்களும், அரசு சார்பாகச் செல்கின்றவர்களும் சர்வதேச விசாரணை தேவையில்லை. உள்நாட்டு விசாரணை வேண்டும் என்று கூறுகின்றனர்.

எதிர்வரும் 51 ஆவது ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் கலந்துகொள்ள உள்ளனர்.

மேற்படி கூட்டத்தொடரில் கலந்துகொள்ள உள்ள இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் இலங்கையின் உள்நாட்டு விசாரணை போதும் என வலியுறுத்த உள்ளார். எனினும் உள்நாட்டு விசாரணையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய எங்களுக்கு நம்பிக்கை இல்லை.

எத்தனையோ ஆணைக்குழுக்கள் இங்கே வந்து விசாரணைகளை முன்னெடுத்தன. ஆனால் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. அவர்களில் எங்களுக்கு நம்பிக்கையும் இல்லை. இவ்வாறான நிலையில் நாங்கள் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி நிற்கின்றோம்.

ஜெனிவா கூட்டத்தொடரின் போது இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் தொடர்பில் தீர்க்கமான முடிவு எடுக்கப்பட வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக நாங்கள் சுமார் 2 ஆயிரம் நாள்களுக்கு மேல் வீதியில் நின்று போராடி வருகிறோம்.நீதிக்காகவே நாங்கள் போராடி வருகிறோம்.

நிதிக்காகப் போராடவில்லை. எமது உறவுகள் தொடர்பாக உண்மையும், நீதியும் எமக்குத் தேவை. தற்போதைய வெளிவிவகார அமைச்சராக உள்ள அலி சப்ரி, நீதி அமைச்சராக இருந்த காலத்தில் ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று நிதிக்காக எங்களுடன் கலந்துரையாடினார்.




அவர் நீதிக்காக ஒருபோதும் எங்களுடன் கலந்துரையாட வில்லை. இலங்கையில் உள்நாட்டு விசாரணை போதும் என்று கூற அவருக்கு எவ்வித அருகதையும் இல்லை. பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள். நாங்கள் தான் நிற்கின்றோம். எங்களுக்கு சர்வதேச விசாரணை மட்டுமே வேண்டும் என்று.

தற்போதைய ஜனாதிபதி நல்லாட்சி அரசில் இருந்தார். அப்போது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் நல்லதொரு முடிவைத் தருவதாகக் கூறி இருந்தார். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை.தற்போது அவர் ஜனாதிபதியாகக் கண்ணை மூடிக்கொண்டு இருக்கிறார்.

இவ்வாறான சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு தாய்மார்களும், உறவுகளும் சர்வதேச விசாரணை மட்டுமே எமக்கு வேண்டும் என்ற கோரிக்கையில் உள்ளனர்.– என்றார்.

# வெளிநாட்டு நாணயங்களுடன் உண்டியல் முகவர் கொழும்பில் நடந்த திடீர் சுற்றிவளைப்பில் சிக்கினார்!

புறக்கோட்டையில் பணமாற்று முகவர் நிறுவனமொன்றை நடத்தி வந்த நபரிடம் இருந்து பெருந்தொகையான வெளிநாட்டு நாணயங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மத்திய வங்கியின் விதிமுறைகளை மீறி அனுமதிப்பத்திரம் இன்றி நடத்தி செல்லப்பட்ட முகவர் நிறுவனம் ஒன்று சுற்றிவளைக்கப்பட்ட போது இந்தப் பணம் மீட்கப்பட்டுள்ளது.

புறக்கோட்டை பிரதேசத்தில் உண்டியல் முறை மூலம் பணத்தை மாற்றும் நபர்களைக் கண்டுபிடிக்க குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் சட்டவிரோத சொத்துக்கள் பிரிவு மற்றும் மத்திய வங்கி அதிகாரிகள் இணைந்து மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போதே மேற்படி நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதற்கமைய, கைது செய்யப்பட்ட நபரிடம் 2 ஆயிரத்து 400 அமெரிக்க டொலர்கள், 900 ஆஸ்திரேலிய டொலர்கள், 1000 ஸ்டெர்லிங் பவுண்ட்கள், 40 ஆயிரம் ஜப்பானிய யென் மற்றும் 200 யூரோக்கள் இருந்தன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவற்றின் இலங்கை பெறுமதி 2 கோடி ரூபாவுக்கும் அதிகமாகும்.

மேற்படி நபரிடம் மத்திய வங்கியின் புலனாய்வு அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





பருத்தித்துறை பிரதேச சபையின் புதிய செயலாளராக அருணகிரி வினோராஜ் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

கரவெட்டி பிரதேச சபையின் செயலாளராகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்ற அவர், பருத்தித்துறை பிரதேச சபையின் செயலாளராக நேற்றுப் பொறுப்பேற்றார். அவரை தவிசாளர் அ.சா. அரியகுமார், உப தவிசாளர் கு.தினேஷ், சபை உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் வரவேற்றனர்.

# கரபந்தாட்டத்தில் தேசிய மட்டத்துக்குத் தெரிவான முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த இரு அணிகள்!



வரலாற்றில் முதற்தடவையாக 16 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கரபந்தாட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த இரு அணிகள் மாகாண மட்ட இறுதி போட்டியில் பங்கு பற்றி தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வற்றாப்பளை மகா வித்தியாலயம் மற்றும் கலைமகள் வித்தியாலயத்தில் 16 வயதுக்குட்பட்ட பெண்கள் அணி மாகாணமட்ட இறுதிப்போட்டியில் விளையாடி தேசிய மட்டத்துக்குத் தெரிவாகி முல்லைத்தீவு மாவட்டத்துக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

முதலாம் இடத்தை முள்ளியவளை வற்றாப்பளை மகாவித்தியாலய அணியும், 2 ஆம் இடத்தை முள்ளியவளை கலைமகள் வித்தியாலயமும் பெற்றுக் கொண்டுள்ளன.

இந்த நிலையில் வற்றாப்பளை மகாவித்தியாலய அணியை தேசிய போட்டியில் திறப்பட செயற்பட்டு வெற்றியைப் பெற்றுக் கொள்ள ஊக்கப்படுத்தும் வகையில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தால் பாராட்டு நிகழ்வொன்று நடைபெற்றது.

இதன்போது வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் கரபந்தாட்டத்துக்கான உபகரணங்கள் சிலவும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.குணபாலன், நிர்வாக உத்தியோகத்தர் சு.விக்னேஸ்வரன், முல்லை வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் உ.சுரேஸ்குமார், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் ந.முகுந்தன், மாவட்ட விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் இ. சகிதரசீலன், வற்றாப்பளை மகாவித்தியாலய அதிபர், கரபந்தாட்ட பயிற்றுநர், பொறுப்பாசிரியர், வீராங்கனைகள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கான ஆர்வம் அதிகரிப்பு என்கிறது வேலைவாய்ப்புப் பணியகம்

வெளிநாட்டு தொழில்களுக்கான இலங்கையர்களின் கோரிக்கை வேகமாக அதிகரித்து வருவதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 208,772 இலங்கையர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக பணியகத்தில் பதிவு செய்து, நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் காமினி செனரத் யாப்பா தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தில் இதுவரை 2,885 இலங்கையர்கள் தென்கொரியாவில் தொழில்களுக்காக சென்றுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக வெளிநாட்டு தொழில்களுக்கான இலங்கையர்களின் கோரிக்கை வேகமாக அதிகரித்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.09.2022இல் வெளியிடப்பெற்றது.